KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 10, No. 06 (2026) 10

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/KIJTS10n06m112026.11

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

உலகமே வழிபாட்டு வெளி: பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதியில் இயற்கைப் படிமங்களும் வைணவ இறையுணர்வும்

The World as a Space of Worship: Nature Imagery and Vaishnava Religious Sensibility in Poykai Alvar's Mudal Tiruvantati

Sakthiramya A.[1,*], Gurumoorthi G.[2], Srinivasan V. C.[3]

[1] Assistant Professor, Department of Tamil (SF), Vellalar College for Women, Thindal, Erode – 638012, Tamil Nadu, India

[2] Principal, Nandha Teacher Training Institute, Erode – 638052, Tamil Nadu, India

[3] Administrative Officer, Nandha Arts and Science College (Autonomous), Erode, Tamil Nadu, India

***Corresponding author:** Sakthiramya A., sakthiramya.ramya@gmail.com

ORCID iD: Sakthiramya A. https://orcid.org/0009-0000-9598-3836 · Srinivasan V. C. https://orcid.org/0009-0008-9926-7982

ARTICLE INFO

Article history
Received: 5 November 2026
Published: 15 November 2026

Peer review
Double-blind peer review

Keywords
Poykai Alvar
Mudal Tiruvantati
ecocriticism
nature imagery
Vaishnava bhakti
sacred ecology
tinai theory

ABSTRACT

The central hypothesis of this study is that Poykai Alvar's Mudal Tiruvantati transforms the whole world into a space of worship offered to the Lord. In the first pasuram, which begins 'vaiyam takaliya varkadale neyyaka veyya kathiron vilakkaka', the earth becomes the lamp bowl, the ocean the ghee and the sun the flame. Identifying these three elements of nature (earth, sea and light) as clusters of images that recur throughout the work, the article examines from an ecocritical perspective how they construct Vaishnava religious sensibility.

A theoretical framework that combines cultural ecology, sacred ecology and the tinai theory of the Tolkappiyam is used. Close reading of the pasurams, analysis of imagery and thematic classification are the methods. The study concludes that in the Mudal Tiruvantati nature functions not as a mere backdrop but as the body (sariram) of the Lord, as an instrument of worship and as a field of ethical relationship. This view, which regards nature not as an object to be exploited but as a related being to be revered and worshipped, stands as a cultural alternative for thinking about today's ecological crisis.

How to cite this article: A., S., G., G., & V. C., S. (2026). உலகமே வழிபாட்டு வெளி: பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதியில் இயற்கைப் படிமங்களும் வைணவ இறையுணர்வும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *10*(06), 148–164. https://doi.org/10.63300/KIJTS10n06m112026.11

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

1. முன்னுரை

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இயற்பாத் தொகுதியைத் தொடக்கி வைக்கும் நூல் பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி. நூறு வெண்பாக்களால் அந்தாதித் தொடையாக அமைந்த இந்நூல், பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் முதலாழ்வார்கள் மூவர் திருக்கோவலூரில் ஒரு இடைகழியில் மழைக்கு ஒதுங்கிய இரவில் பாடப்பட்டதாக மரபு கூறுகிறது. இருளில் தம்மை நெருக்கிய நான்காமவர் யார் எனக் காண விளக்கேற்ற விழைந்த பொய்கையார், எண்ணெய் திரி அகல் என்ற மனிதக் கருவிகளுக்குப் பதிலாக வையத்தையே அகலாக்கினார். இந்த ஒரு பாவனையில்தான் இக்கட்டுரையின் தலைப்பான "உலகமே வழிபாட்டு வெளி" என்ற கருத்தாக்கம் பொதிந்துள்ளது.

பொய்கையாழ்வார் காஞ்சிபுரம் திருவெஃகாவில் யதோத்தகாரி கோயிலுக்கு அருகிலுள்ள பொய்கையில் தாமரை மலரில் தோன்றியவர் என்பது வைணவமரபு. அவர் பெயரே ஒரு நீர்நிலையைக் குறிக்கிறது என்பது சூழலியல் நோக்கில் கவனிக்கத்தக்கது. தொண்டை நாட்டின் ஏரி, குளம், ஆறு சார்ந்த நிலவியல் இலக்கியத்தில் பல்டுக்குகளாக செதுக்கப்பட்டுள்ளதை முந்தைய ஆய்வுகள் காட்டுகின்றன (Buchholz, 2023). வைணவத் திருத்தலங்கள் ஆற்றங்கரைகளிலும் தீவுகளிலும் தொடர்ந்து அமைந்துள்ள முறையும் இம்மரபின் நீர்சார் இறையியலை உணர்த்துகிறது (Czerniak-Drożdżowicz, 2023). இதன் பின்னணியில், முதல் திருவந்தாதியை இயற்கையோடு பிணைந்த இறையுணர்வின் ஆவணமாக வாசிப்பது பொருத்தமானது.

முதலாழ்வார்களின் அந்தாதிகளைப் பற்றிய முந்தைய ஆய்வுகள் பெரும்பாலும் பக்திநெறி, சரணாகதி, திருநாம மஹிமை போன்ற இறையியல் கூறுகளில் கவனம் செலுத்தியுள்ளன (Sripriya, 2021). மறுபுறம், தமிழில் சூழலியல் திறனாய்வு வளர்ந்து வரும் வேளையில், அதன் கவனம் சங்க இலக்கியம், திருக்குறள், நவீனக் கவிதை ஆகியவற்றில்தான் முதன்மையாகக் குவிந்துள்ளது (Ravikumar, 2022; Murugesapandian, 2026). பக்தி இலக்கியம், குறிப்பாக ஆழ்வார் பாசுரங்கள், சூழலியல் திறனாய்வுச் சட்டகத்தில் அரிதாகவே ஆராயப்பட்டுள்ளன. இந்த இடைவெளியை நிரப்புவதே இவ்வாய்வின் தேவை.

1.1 ஆய்வுச் சிக்கல்


முதல் திருவந்தாதியில் இடம்பெறும் நிலம், கடல், ஒளி ஆகிய படிமங்கள் அழகியல் அணிகளாக மட்டும் செயல்படுகின்றனவா, அல்லது இறைவனும் இயற்கையும் மனிதனும் இணையும் ஒரு உலகப் பார்வையைக் கட்டமைக்கின்றனவா என்பதே இவ்வாய்வின் சிக்கல். இயற்கையை மாயை என்றோ, வீடுபேற்றுக்குத் தடை என்றோ காணும் துறவுந் நோக்குக்கு மாறாக, இந்நூல் இயற்கையை இறையனுபவத்தின் வாயிலாகக் காண்கிறதா என்ற வினாவும் இதனுள் அடங்கும்.

1.2 ஆய்வு நோக்கங்கள்

1. முதல் திருவந்தாதியில் நிலம், கடல், ஒளி ஆகிய இயற்கைக் கூறுகளைச் சார்ந்த படிமங்களை இனங்கண்டு வகைப்படுத்துதல்.
2. இப்படிமங்கள் வைணவ இறையியலின் அவதாரம், அர்ச்சை, உடல்–உயிர் உறவு ஆகிய கருத்தாக்கங்களோடு எவ்வாறு இணைகின்றன என்பதை விளக்குதல்.
3. சூழலியல் திறனாய்வுக் கோட்பாடுகளின் வழி இந்நூலின் இயற்கை–இறை உறவைத் திறனாய்தல்.
4. இன்றைய சூழலியல் அறம் சார்ந்த சிந்தனைக்கு இந்நூல் தரும் பங்களிப்பை மதிப்பிடுதல்.

1.3 ஆய்வு வினாக்கள்

- முதல் திருவந்தாதியில் மிகுதியாகத் தொடர்ந்து வரும் இயற்கைப் படிமங்கள் யாவை?
- இப்படிமங்கள் இறைவனை இயற்கைக்கு மேலாகவா, உள்ளேயா, இரண்டுமாகவா நிறுத்துகின்றன?
- இந்நூலின் இயற்கைப் பார்வை இன்றைய சூழலியல் சிந்தனைக்கு எத்தகைய பொருத்தப்பாடுடையது?



படம் 1. உலகமே வழிபாட்டு வெளி: பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி

திருமாலோடும் முதலாழ்வார்களோடும் இணைந்த சூழலியல் மற்றும் பக்திச் சூழலைக் குறிக்கும் வகையில் இத்திரைப்படம் அமைந்துள்ளது. திருக்கோவலூர் இடைகழியில் பொய்கையாழ்வார் வையத்தையே அகலாக்கி விளக்கேற்றிய நிகழ்வையும், இயற்கை மற்றும் இறைவனின் தொடர்பையும் இப்படம் அழகாக விளக்குகிறது.

2. முந்தைய ஆய்வுகள் மீளாய்வு

முந்தைய ஆய்வுகளை மூன்று நீரோட்டங்களாகப் பிரித்துணரலாம்: (அ) முதலாழ்வார் அந்தாதிகள் பற்றிய தமிழாய்வுகள்; (ஆ) தமிழில் சூழலியல் திறனாய்வு சார்ந்த ஆய்வுகள்; (இ) இந்திய மதமும் சூழலியலும் குறித்த பன்னாட்டு ஆய்வுகள். மூன்றும் தனித்தனியே வளர்ந்துள்ளன; அவற்றை இணைக்கும் ஆய்வு அரிது.

2.1 முதலாழ்வார் அந்தாதிகள் பற்றிய ஆய்வுகள்

Sripriya (2021) முதல் மூன்று திருவந்தாதிகளில் வெளிப்படும் பக்திநெறியை ஆராய்கிறார். திருமாலின் திருவடியைச் சரணடைதல், திருநாமம் ஓதுதல், அவதாரங்களையும் திருத்தலங்களையும் போற்றுதல் ஆகியவை அன்புவழிப் பக்தியின் கூறுகளாக அவர் காட்டுகிறார். இந்த ஆய்வு இறையியல் மையமானது; "வையம் தகளியா" போன்ற பாசுரங்களின் இயற்கைப் படிமவியலை அது தனியே ஆராயவில்லை. முதல் திருவந்தாதியின் மரபுவழி உரைகளும் இறையியல் விளக்கத்தையே முன்னிறுத்துகின்றன. இயற்கைப் படிமங்களைத் தொகுத்து, அவற்றின் சூழலியல் பொருளை விளக்கும் முயற்சி இதுவரை நடைபெறவில்லை.

2.2 தமிழில் சூழலியல் திறனாய்வு

தமிழ்ச் சூழலியல் திறனாய்வின் அடித்தளம் தொல்காப்பியத் திணைக் கோட்பாடு. Ravikumar (2022) செவ்வியல் இலக்கியங்களில் உள்ள சூழலியல் பதிவுகளைத் தொகுத்து, இன்றைய சூழல் சீரழிவின் காரணங்களைத் தேட அவை உதவும் என்கிறார். Murugesapandian (2026) சங்கப் பாடல்கள் இயற்கைச் சூழலிலிருந்து பிரிக்க இயலாதவை என்றும், சூழலைப் போற்றுவதன் வழியே சங்கத் தமிழர் தம் இருத்தலை உணர்ந்தனர் என்றும் வாதிடுகிறார். Sankareswari (2023) சங்க இலக்கியத்தின் காடுகளையும் அவற்றின் சூழல் அமைவுகளையும், Emi Karmichael Paul (2023) நான்கு நிலத்து இனக்குழுக்களின் இயற்கைப் பாதுகாப்பு மரபுகளையும் ஆராய்கின்றனர்.

திருக்குறளின் பண்பாட்டுச் சூழலியல் கொள்கையை Rajeswari (2020) விளக்குகிறார். Balasubramanian (2022) அள்ளூர் நன்முல்லையார் பாடல்களைச் சூழலியப் பெண்ணிய நோக்கில் வாசிக்கிறார். Arthi (2023) நவீனக் கவிஞர் குலோத்துங்கனின் படைப்புகளைச் சூழலியத் திறனாய்வு நோக்கில் ஆய்கிறார். Snehajansi (2024) பாரி, பேகன், அதிகன் ஆகிய வள்ளல்களை ஆழ்சூழலியலாளர்களாக (deep ecologists) முன்வைக்கிறார். தமிழ் வழிபாட்டு மரபுகளின் சூழல் பாதுகாப்புக் கூறுகளை Navasakthivel and Bhuvaneswari (2022) எடுத்துக்காட்டுகின்றனர். இவற்றுள் கடைசி ஆய்வு மட்டுமே வழிபாட்டைச் சூழலியலோடு நேரடியாக இணைக்கிறது; ஆனால் அதுவும் ஆழ்வார் பாசுரங்களை மையமாகக் கொள்ளவில்லை.

திணை என்ற கருத்தாக்கத்தையே மறுஆய்வு செய்யும் பன்னாட்டு ஆய்வும் உண்டு. Landy, Gauché and Sricandane (2022) சங்கக் கவிதையை "நிலக்காட்சிக் கவிதை" என்று மட்டும் காணும் வாசிப்பு, பிற்கால உரையாசிரியர்களின் வகைப்பாட்டாலும் நவீன மண்டலவாத வாசிப்பாலும் உறுதிப்பட்டது என்கின்றனர். இந்த எச்சரிக்கை,

திணையை இயந்திரத்தனமாக அன்றி, மாறிவரும் ஒரு வாசிப்புக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இவ்வாய்வுக்கு உணர்த்துகிறது.

2.3 இந்திய மதமும் சூழலியலும்: பன்னாட்டு ஆய்வுகள்

Sherma (2021) தொடக்ககால இந்து நூல்களில் இயற்கையுடனான உறவு, மதிப்பும் பரஸ்பரத் தன்மையும் கொண்டது என்கிறார்; இந்து மரபுகளை "இடம் சார்ந்த சூழலியல் ஆன்மீகங்கள்" என அவர் வரையறுக்கிறார். 2023-இல் வெளிவந்த *Cracow Indological Studies* இதழ் தென்னாசிய இலக்கியங்களைப் பண்பாட்டுச் சூழலியல் நோக்கில் ஆராய்கிறது. இயற்கையும் பண்பாடும் தனித்தனி துறைகள் அல்ல; அவை பிணைந்தவை என்ற அடிப்படையை Czerniak-Drożdżowicz and Dębicka-Borek (2023) முன்வைக்கின்றனர். அதே இதழில் Buchholz (2023) காஞ்சிப்புராணத்தின் நாட்டு–நகரப் படலங்களில் தொண்டை நாட்டு நிலவியலும் சமயத் திருத்தலவியலும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்படுவதைக் காட்டுகிறார். Czerniak-Drożdżowicz (2023) காவிரி, பாலாறு கரைகளில் அமைந்த ரங்கநாதர் கோயில்களின் வழி, ஆறுகள் தெய்வத் தன்மையும் இடங்களை இணைக்கும் பண்பும் கொண்டவை என்கிறார்.

2.4 ஆய்வுஇடைவெளி

மேற்கண்ட ஆய்வுகளில் மூன்று இடைவெளிகள் தெளிவாகத் தெரிகின்றன. முதலாவதாக, தமிழ்ச் சூழலியல் திறனாய்வு சங்க இலக்கியத்தைத் தாண்டி பக்தி இலக்கியத்தை அரிதாகவே நாடுகிறது. இரண்டாவதாக, முதலாழ்வார் ஆய்வுகள் இயற்கைப் படிமங்களை அணியாகவே காண்கின்றன, உலகப் பார்வையாகக் காணவில்லை. மூன்றாவதாக, பன்னாட்டு மத–சூழல் ஆய்வுகள் வடமொழி, மாஹாத்மியம், தலபுராண மூலங்களையே மையமாகக் கொள்கின்றன. இம்மூன்றையும் இணைத்து, ஒரு தொடக்ககாலத் தமிழ்ப் பக்தி நூலைச் சூழலியல் இறையியலின் (eco-theology) மூலமாக வாசிப்பதே இக்கட்டுரையின் பங்களிப்பு.



படம் 2. ஆழ்வார் பாசுரங்களின் சூழலியல் இறையியல் வாசிப்பு: முந்தைய ஆய்வுகளின் மீளாய்வு மற்றும் ஆய்வு இடைவெளி

இப்படம் முதலாழ்வார் இலக்கியம், தமிழ் சூழலியல் திறனாய்வு, பன்னாட்டு மத–சூழல் ஆய்வுகள் ஆகிய மூன்று தனித்தனி புலங்களை விளக்குகிறது. அவை ஒன்றையொன்று எவ்வாறு முழுமையாக இணைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, ஆழ்வார் பாடல்களைச் சூழலியல் இறையியல் கண்ணோட்டத்தில் இணைத்து ஆய்வு செய்வதன் அவசியத்தை இப்படம் வலியுறுத்துகிறது.

3. ஆய்வு முறையியலும் கோட்பாட்டுச் சட்டகமும்

3.1 சூழலியல் திறனாய்வு

சூழலியல் திறனாய்வு இலக்கியத்துக்கும் இயற்புச் சூழலுக்கும் இடையிலான உறவை ஆராயும் திறனாய்வு முறை. இலக்கியம் இயற்கையை எவ்வாறு பார்க்கிறது, அந்தப் பார்வை மனிதனின் சூழல் நடத்தையை எவ்வாறு வடிவமைக்கிறது என்பது அதன் மையவினா. தமிழில் இந்த அணுகுமுறை வளர்ந்து வருகிறது (Arthi, 2023; Ravikumar, 2022). இவ்வாய்வு இந்தப் பொதுச் சட்டகத்துள் நான்கு கோட்பாட்டு வளங்களைப் பயன்படுத்துகிறது.

3.2 பண்பாட்டுச் சூழலியல்

இலக்கியம் பண்பாட்டின் சூழலமைப்பில் ஒரு உயிர்த்துடிப்பான சக்தியாகச் செயல்படுகிறது என்பது பண்பாட்டுச் சூழலியல் கோட்பாட்டின் அடிப்படை. இயற்கையையும் பண்பாட்டையும் தனித்தனியே பிரிக்கும் முன்னைய அணுகுமுறைகளுக்கு மாறாக, அவற்றின் பிணைப்பு நூல்களில் பலவகையில் வெளிப்படுகிறது என இந்த அணுகுமுறை கருதுகிறது (Czerniak-Drożdżowicz & Dębicka-Borek, 2023). முதல் திருவந்தாதியின் வளியில், இயற்கைக் கூறுகள் வழிபாட்டுச் சடங்கின் கருவிகளாகவும் (அகல், நெய், சுடர்), சடங்கு இயற்கையை நோக்கிய மனநிலையை மாற்றும் சக்தியாகவும் இருவழிச் செயல்படுகின்றன.

3.3 புனிதச் சூழலியலும் ஆழ்சூழலியலும்

புனிதச் சூழலியல், இயற்கையைத் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதும் மரபுகள் சூழல் பாதுகாப்புக்கும் பங்களிக்கின்றன என்கிறது. இந்து மரபுகள் இடம் சார்ந்த சூழலியல் ஆன்மீகங்கள் என்றும், மரங்கள், ஆறுகள், மலைகள் ஆகியவற்றை மதிப்பது அவற்றின் அடிப்படை என்றும் Sherma (2021) வாதிடுகிறார். ஆழ்சூழலியல் (deep ecology), மனிதனை மையமாகக் கொண்ட பார்வைக்கு (anthropocentrism) மாறாக, எல்லா உயிர்களுக்கும் உள்ளார்ந்த மதிப்பு உண்டு என்கிறது; தமிழ்ச் சூழலில் இந்தக் கருத்தை Snehajansi (2024) பயன்படுத்தியுள்ளார். வைணவத்தின் விசிஷ்டாத்வைதக் கொள்கையில் செல்லும் (அறிவுடைப் பொருள்), அசித்து (அறிவில்லாப் பொருள்) இரண்டும் ஈசுவரனின் உடல் என்ற சரீர–சரீரி பாவம், இந்த இரண்டு அணுகுமுறைகளுக்கும் இடையே ஒரு பாலமாக அமைகிறது. இதனால் முதல்

திருவந்தாதி இயற்கையை வழிபடும்போது இயற்கை வழிபாட்டில் (pantheism) மூழ்காமல், இயற்கையை இறைவனின் திருமேனியாகக் காணும் இறையனைத்தும் கொள்கையாக (panentheism) வெளிப்படுகிறது.


3.4 திணைக் கோட்பாடு

தொல்காப்பியம் முல்லைநிலத்துக்குரிய தெய்வமாக மாயோனைக் குறிப்பிடுகிறது. அதாவது திருமால் வழிபாடு தொடக்கத்திலேயே ஒரு நிலத்தோடும் அதன் கருப்பொருள்களோடும் பிணைக்கப்பட்டுள்ளது. ஆனால் முதல் திருவந்தாதியில் திருமால் ஒரு திணைக்குள் அடங்குவதில்லை. வேங்கடம் (குறிஞ்சி), ஆயர் வாழ்வு (முல்லை), கடல் (நெய்தல்) என அவன் எல்லாத் திணைகளிலும் விரிகிறான். இதனை "திணைக் கடந்த இறைமை" என இவ்வாய்வு பெயரிடுகிறது. திணையை இறுகிய வகைப்பாடாகக் காணாமல், மாறிவரும் ஒரு வாசிப்புமுறையாகக் காணவேண்டும் என்ற Landy et al. (2022) அவர்களின் எச்சரிக்கையை இங்கு பின்பற்றுகிறோம்.

3.5 ஆய்வு முறை

1. **தரவுத் தொகுப்பு:** நூறு பாசுரங்களிலும் நிலம் (வையம், மண், பார், நிலம், வரை, குன்றம், வேங்கடம்), கடல் (கடல், வேலை, ஆழி, நீர், ஆலிலை), ஒளி (கதிரோன், சுடர், விளக்கு, எரி, கார்) சார்ந்த சொற்கள் இனங்காணப்பட்டன.
2. **பொருண்மை வகைப்பாடு:** இனங்காணப்பட்ட பாசுரங்கள் மூன்று படிமத் தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன; ஒரே பாசுரம் பல தொகுதிகளில் இடம்பெறலாம்.
3. **நெருக்க வாசிப்பு:** ஒவ்வொரு தொகுதியிலும் பிரதிநிதித்துவமான பாசுரங்கள் படிமம், அணி, இறையியல் பொருள், சூழலியல் பொருள் என நான்கு நிலைகளில் ஆராயப்பட்டன.
4. **ஒப்பீடும் விவாதமும்:** கண்டறிந்தவை சங்கத் திணை மரபுடனும் இன்றைய சூழலியல் அறச் சிந்தனையுடனும் ஒப்பிடப்பட்டன.

முதன்மைச் சான்று முதல் திருவந்தாதியின் மூலப் பாடம்; துணைமைச் சான்றுகள் துணைநூற்பட்டியலில் உள்ள 15 அண்மைக்கால ஆய்வுகள் (2020–2026).



படம் 3. முதல் திருவந்தாதியின் சூழலியல் இறையியல் வாசிப்பு: ஆய்வு முறையியல் மற்றும் கோட்பாட்டுச் சட்டகம்

இப்படம் முதல் திருவந்தாதியை சூழலியல் நோக்கில் ஆராய்வதற்கான கோட்பாடுகளையும் முறையையும் விளக்குகிறது. பண்பாட்டுச் சூழலியல், புனிதச் சூழலியல் மற்றும் விசிஷ்டாத்வைதக் கொள்கையான 'சரீர-சரீரி பாவம்' ஆகியவற்றின் அடிப்படையில், இயற்கையை இறைவனின் திருமேனியாகக் காணும் இறையனைத்துக் கொள்கையை (Panentheism) இப்படம் முன்வைக்கிறது. மேலும், திணைக் கடந்த இறைமை என்ற கருத்தாக்கத்தையும் இது விளக்குகிறது

4. உலகம் விளக்காக: "வையம் தகளியா" பாசுரத்தின் படிமவியல்

முதல் திருவந்தாதியின் முதற் பாசுரமே நூலின் முழுச் சூழலியல் இறையியலுக்கும் திறவுகோல்:

வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை இடராழி நீங்குகவே என்று (மு.தி. 1)

4.1 மூன்று கூறுகள், ஒரு விளக்கு

வையம் (நிலம்) அகலாகவும், வார்கடல் நெய்யாகவும், கதிரோன் சுடராகவும் உருவகிக்கப்படுகின்றன. இது முற்றுருவகம்; ஆனால் இதன் அமைப்பு வெறும் அணியன்று. விளக்கு என்பது மூன்று மூலக்கூறுகளின் இணைவால் மட்டுமே செயல்படும் ஒரு அமைப்பு. அகல் இல்லாமல் நெய் நிற்காது; நெய் இல்லாமல் சுடர் நீடிக்காது; சுடர் இல்லாமல் அகல் வெறும் கலன். இவ்வாறு நிலம், கடல், ஒளி ஆகியவற்றை ஒன்றையொன்று சார்ந்த ஒரு சூழலமைப்பாக (ecosystem) ஆழ்வார் காட்டுகிறார். இந்தப் பரஸ்பரச் சார்புதான் சூழலியலின் முதற்பாடம்.

மூன்று கூறுகளுக்கும் தரப்படும் அடைமொழிகளும் கவனிக்கத்தக்கவை. "வார்" என்ற அடை கடலின் நீளத்தையும் நீர்மையையும், "வெய்ய" என்ற அடை கதிரவனின் வெப்பத்தையும் உணர்த்துகின்றன. இவை கற்பனையான வடிவங்கள் அல்ல; நேரடியாகக் கண்டுணரக்கூடிய இயற்கையின் பண்புகள். சங்கப் பாடல்களில் இயற்கை அறிவு நுட்பமாகப் பதிவான மரபு (Murugesapandian, 2026) இங்கும் தொடர்வதைக் காணலாம்.


4.2 அளவுமாற்றம்: இல்லத்து விளக்கு அண்ட விளக்காக

தமிழ் வீடுகளிலும் கோயில்களிலும் ஏற்றப்படும் அகல் விளக்கு ஒரு சிறிய, பழக்கமான வழிபாட்டுப் பொருள். ஆழ்வார் இந்த இல்லச் சடங்கை அண்டஅளவிற்கு விரிவுபடுத்துகிறார். இதனால் இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. முதலாவதாக, வழிபாட்டு வெளி கோயிலின் கருவறையைத் தாண்டி முழு உலகமாக விரிகிறது. இரண்டாவதாக, இயற்கைக் கூறுகள் வழிபாட்டுப் பொருள்களாகும்போது அவற்றுக்குப் புனிதம் சேருகிறது. பூசைக்குரிய அகலை எவரும் அழுக்காக்குவதில்லை; வையமே அகலானால், வையத்தைச் சிதைப்பது வழிபாட்டுக் கருவியைச் சிதைப்பதாகும். இந்த நுட்பமான அறவியல் விளைவையே இவ்வாய்வு "உலகமே வழிபாட்டு வெளி" என்று பெயரிடுகிறது.

4.3 இரண்டு ஆழிகள்: சுடராழியும் இடராழியும்

பாசுரத்தின் இறுதிப் பகுதி "ஆழி" என்ற சொல்லை இருமுறை ஆள்கிறது. சுடராழி என்பது திருமாலின் ஒளிவீசும் சக்கரம்; இடராழி என்பது துன்பக் கடல். ஒரே சொல் ஒளியையும் கடலையும் குறிப்பதால், பாசுரத்தின் தொடக்கத்தில் இடம்பெற்ற கடல்–கதிர் இணை இறுதியில் அகவயியல் தளத்தில் மீண்டும் தோன்றுகிறது. புறக் கடல் நெய்யாகி ஒளிக்குத் துணை செய்வதுபோல, அகக் கடலான துன்பம் இறையொளியால் நீங்கவேண்டும். இங்கு வெளி உலகும் உள் உலகும் ஒரே படிமமொழியால் இணைக்கப்படுகின்றன.

இந்தச் சொல்லாடல் சங்கக் கவிதையின் உள்ளுறை மரபை நினைவூட்டுகிறது. சங்கக் கவிஞர் இயற்கைப் பொருள்களால் அகமனத்தை உணர்த்தியதுபோல, பொய்கையார் இயற்கைப் பொருள்களால் ஆன்மீக மனநிலையை உணர்த்துகிறார் (Sankareswari, 2023). இவ்வாறு முதல் பாசுரம் நூலின் மூன்று படிமத் தொகுதிகளையும் ஒரே மூச்சில் அறிமுகப்படுத்துகிறது; அடுத்த மூன்று பகுதிகள் அவற்றைத் தனித்தனியே விரிவாக ஆராய்கின்றன.



படம் 4. உலகம் விளக்காக: "வையம் தகளியா" பாசுரத்தின் படிமவியல்

நிலம் அகலாகவும், கடல் நெய்யாகவும், சூரியன் விளக்காகவும் உருவகிக்கப்பட்டு, முழு உலகமும் வழிபாட்டு வெளியாக மாற்றப்படுவதை இப்படம் விளக்குகிறது. இல்லத்து விளக்கை அண்ட அளவிற்கு விரிவுபடுத்தி, இயற்கையும் இறைவனும் இணையும் சூழலியல் பரஸ்பரச் சார்பை இது அழகாக வெளிப்படுத்துகிறது.

5. நிலம்: இறைவனால் பேணப்படும் மண்

முதல் திருவந்தாதியில் நிலம் இறைவனால் படைக்கப்படும், மீட்கப்படும், காக்கப்படும் ஒரு உயிர்ப்பொருளாகக் காட்டப்படுகிறது. வையம், மண், பார், நிலம் என்ற சொற்கள் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பாசுரங்களில் இடம்பெறுகின்றன (எ.கா., மு.தி. 2, 3, 9, 10, 17, 18, 21, 25, 29, 39, 61, 96). மலையும் வேங்கடமும் ஏழு பாசுரங்களில் மையம் பெறுகின்றன (மு.தி. 26, 27, 38, 39, 73, 76, 77).

5.1 படைத்து, இடந்து, உண்டு, உமிழ்ந்த பார்

இரண்டாம் பாசுரம் நிலத்தின் வாழ்க்கைவரலாற்றைத் தொகுத்துச் சொல்கிறது:

என்று கடல்கடைந்தது எவ்வுலகம் நீரேற்றது ஒன்றும் அதனை யுணரேன் நான் – அன்றது அடைத்துடைத்துக் கண்படுத்த ஆழி, இதுநீ படைத்திடந் துண்டுமிழ்ந்த பார் (மு.தி. 2)

படைத்தல் (சஷ்டி), இடந்தல் (வராக வடிவில் மூழ்கிய நிலத்தை எடுத்தல்), உண்டல் (பிரளயத்தில் உலகைத் தன் வயிற்றில் காத்தல்), உமிழ்தல் (மீண்டும் வெளியே வைத்தல்) என்ற நான்கு வினைகளும் நிலத்தின் மீது இறைவன் காட்டும் தொடர் அக்கறையைக் காட்டுகின்றன. சூழலியல் நோக்கில் இது ஒரு முக்கியமான மாற்றம். நிலம் மனிதனின் உடைமையாகும் வளம் அல்ல; இறைவனால் மீண்டும் மீண்டும் மீட்கப்படும், பாதுகாக்கப்படும் ஒன்று. "ஒன்றும் அதனை யுணரேன் நான்" என்ற அடி,

இயற்கையின் முன் மனித அறிவின் எல்லையை ஒப்புக்கொள்ளும் பணிவைக் காட்டுகிறது. இந்தப் பணிவு ஆழ்சூழலியலின் அடிப்படைக் கூறான மனிதமையமற்ற நோக்குடன் ஒத்திசைகிறது (Snehajansi, 2024).

5.2 வரையும் நீரும்: இறைவனின் உறைவிடம்

ஐந்தாம் பாசுரம் அரனையும் நாரணனையும் இணைத்து ஒப்பிடும் புகழ்பெற்ற பாடல்:

அரன்நாரணன் நாமம் ஆன்விடைபுள் ஊர்தி உரைநூல் மறையுறையும் கோயில் – வரைநீர் கருமம் அழிப்பளிப்பு கையதுவேல் நேமி உருவம் எரிகார் மேனி ஒன்று (மு.தி. 5)

இவ்வெண்பாவில் "வரை நீர்" என்ற இணைச்சொல் இரு தெய்வங்களின் உறைவிடங்களைக் குறிக்கிறது: அரனுக்கு மலை (கயிலை), மாலுக்கு நீர் (பாற்கடல்). "எரி" (நெருப்பு வண்ணம்), "கார்" (முகில் வண்ணம்) என உருவமும் இயற்கைக் கூறுகளாலேயே வரையறுக்கப்படுகிறது. இறைவனைத் தெரிந்துகொள்ள மலை, நீர், நெருப்பு, முகில் ஆகியவை அடையாளங்களாகின்றன. இது சூழலியல் இறையியலின் ஒரு தெளிவான சான்று: இறைவனை அறியும் மொழியே இயற்கையின் மொழியாக இருக்கிறது.

5.3 வேங்கடம்: குறிஞ்சித் திணையின் இறைமயமாதல்

பொய்கையாழ்வார் திருவேங்கடமுடையானிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் என்பதை வைணவ மரபும் வாழித் திருநாமமும் வலியுறுத்துகின்றன. வேங்கடப் பாசுரங்களில் மலையும் அதன் முகில், மூங்கில், விலங்குகள், குறவர் வாழ்வு ஆகியவையும் சேர்ந்து ஒரு முழுமையான குறிஞ்சித் திணைச் சூழலாகவே வருகின்றன (மு.தி. 26, 27, 38, 76, 77). சங்கக் குறிஞ்சியில் காதலுக்குரிய சூழலாக இருந்த மலை, இங்கு இறைக் காதலுக்குரிய வெளியாக மாறுகிறது. சங்கக் காடுகளின் சூழல் அமைவுகளைப் பற்றிய Sankareswari (2023) அவர்களின் விளக்கம் இந்தத் தொடர்ச்சியைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

மலையைத் திருத்தலமாகக் காணும் இந்தப் பார்வை, மலையோடு தொடர்புடைய கதைகள் இடத்தைப் புனிதமாக்கும் முறையை அறிய பண்பாட்டுச் சூழலியல் ஆய்வுகளுடன் இணைகிறது (Czerniak-Drożdżowicz & Dębicka-Borek, 2023). இடம் சார்ந்த இந்து ஆன்மீகத்தில் மலைகளும் காடுகளும் மதிப்புக்குரியவை என்ற Sherma (2021) அவர்களின் கருத்தும் இங்கு உறுதிப்படுகிறது.

5.4 திருக்கோவலூர்: நிலமளந்தவனின் முன்

முதல் திருவந்தாதி பிறந்ததாகக் கூறப்படும் திருக்கோவலூரின் மூலவர் உலகளந்த பெருமாள் (திரிவிக்கிரமன்). மூவடியால் மண்ணும் விண்ணும் அளந்த இந்தத் தெய்வத்தின் முன் பாடப்பட்ட நூல், வையத்தையே அகலாக்கித் தொடங்குவது தற்செயலானதல்ல. உலகை அளந்தவனுக்கு உலகையே விளக்காக்கி ஆழ்வார் வழிபடுகிறார். இடம், தெய்வம், பாடல் மூன்றும் நிலம் என்ற கருவைச் சுற்றி ஒன்றிணைகின்றன. தென்னிந்தியத் திருத்தலஇலக்கியங்கள் இவ்வாறு

உண்மையான நிலவியலையும் வழிபாட்டு நிலவியலையும் ஒன்றாகப் பிணைக்கும் முறையை Buchholz (2023) காஞ்சியை முன்வைத்து விளக்குகிறார்.



படம் 5. நிலம்: இறைவனால் பேணப்படும் மண்

இப்படம் முதல் திருவந்தாதியில் நிலம் எவ்வாறு படைக்கப்பட்டு, காக்கப்படும் உயிர்ப்பொருளாகக் காட்டப்படுகிறது என்பதை விளக்குகிறது. வரையும் நீரும் இறைவனின் உறைவிடங்களாகவும், திருவேங்கடம் குறிஞ்சித் திணையின் இறையிடமாகவும் மாறுவதை இது சுட்டுகிறது. மேலும், திருக்கோவலூர் திரிவிக்கிரமன் முன் வையமே அகலாக்கப்பட்ட சூழலியல் இறையியலை வெளிப்படுத்துகிறது.

6. கடல்: இறைவனின் நிறமும் உறைவும்

முதல் திருவந்தாதியில் கடல் இறைவனின் நிறமாகவும், உறைவிடமாகவும், அவனது செயல்களின் அரங்காகவும் மூன்று நிலைகளில் செயல்படுகிறது. கடல் சார்ந்த சொற்கள் குறைந்தது பன்னிரண்டு பாசுரங்களில் வருகின்றன (மு.தி. 1, 2, 10, 16, 19, 39, 42, 61, 67, 73, 92, 96, 99); ஆலிலைப் படிமம் மூன்று பாசுரங்களில் இடம்பெறுகிறது (மு.தி. 19, 34, 69).

6.1 காரோத வண்ணன்: கடல் நிறத்த இறைவன்

திசையும் திசையுறு தெய்வமும் தெய்வத்து இசையும் கருமங்கள் எல்லாம் – அசைவில்சீர்க் கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத வண்ணன் படைத்த மயக்கு (மு.தி. 7)

"காரோத வண்ணன்" என்ற தொடர் கருமுகிலையும் (கார்) கடலையும் (ஓதம்) ஒரே நிறத்தில் இணைத்து இறைவனுக்குச் சூட்டுகிறது. கடலிலிருந்து எழும் நீர் முகிலாகி மழையாகிமீண்டும் கடலை அடைவது நீர்ச்சுழற்சியின் அடிப்படை. கடலையும்

முகிலையும் ஒரே வண்ணமாகக் காணும் இந்தப் படிமம், நீரின் இந்தச் சுழற்சியை இறைவனின் உடல்வண்ணத்தில் அடக்குகிறது. திசைகளும் திசைத் தெய்வங்களும் செயல்களும் எல்லாம் அவன் படைத்த மயக்கம் என்பதால், உலகின் ஒவ்வொரு மூலையும் அவன் விளையாட்டின் இடமாகிறது.

6.2 கடல் கடைதல்: வளமும் அளவும்

மு.தி. 2, 7 ஆகிய பாசுரங்கள் பாற்கடல் கடைந்த நிகழ்வை நினைவூட்டுகின்றன. புராணப் பொருளில் கடல் கடைதல் அமுதம் என்ற வளத்தைத் தரும் நிகழ்வு. சூழலியல் வாசிப்பில் இது ஒரு எச்சரிக்கையுடன் வருகிறது: கடல் வளத்தைத் தரும்; ஆனால் அந்தக் கடைதல் இறைவனின் துணையுடன், அறநெறியுடன் நடைபெறும் ஒன்று. கடலை அடைத்து, உடைத்து, அதன்மேல் துயின்ற நிகழ்வுகளைக் கூறும் மு.தி. 2-இன் "அடைத்துடைத்துக் கண்படுத்த ஆழி" என்ற தொடர், கடலோடு இறைவன் கொள்ளும் உறவு ஆளுமையும் அணைப்பும் இணைந்தது எனக் காட்டுகிறது.

வாழ்வின் அடிப்படையான இயற்கை வளங்களைப் பகிர்ந்து அளவோடு பயன்படுத்தும் தமிழ் மரபு சங்க இலக்கியத்திலேயே வேரூன்றியது (Emi Karmichael Paul, 2023). முதல் திருவந்தாதியில் அந்த அறம் இறையியல் வடிவம் பெறுகிறது: கடலின் வளம் இறைவனின் அருள்; மனிதனின் கைப்பற்றுதல் அல்ல.

6.3 ஆலிலை செல்வன்: விளைவின் நடுவில் காப்பு

பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின் மேல்அன்று நீவளர்ந்த மெய்யென்பர் – ஆலன்று வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு (மு.தி. 69)

பிரளயக் கடலின் மேல் ஆலிலையில் குழந்தையாகக் கிடந்து, ஏழு உலகங்களையும் தன் வயிற்றில் காத்த திருமாலின் படிமம் இது. ஆழ்வார் ஒரு வினாவை எழுப்புகிறார்: உலகெல்லாம் வயிற்றுள் இருக்கும்போது அந்த ஆலமரம் எங்கு இருந்தது? கடலிலா, விண்ணிலா, மண்ணிலா? இந்த வினா தருக்கத் துளையல்ல; வியப்பின் வெளிப்பாடு. கடல், விண், மண் என்ற மூன்று வெளிகளும் ஒரே வரியில் வரிசைப்படுத்தப்படுகின்றன. இறுதி அடி "சோலைசூழ் குன்றெடுத்தாய்" என கோவர்தனமலையைக் குறிக்கிறது; மழையிலிருந்து ஆவினங்களையும் ஆயரையும் காத்த நிகழ்வு அது.

இந்தப் பாசுரத்தில் இரண்டு சூழலியல் உண்மைகள் ஒன்றிணைகின்றன. கடல் அழிவுக் காலத்தில் எல்லாவற்றையும் மூழ்கடிக்கும் ஆற்றல்; ஆனால் அந்த வெள்ளத்தின் நடுவிலும் ஒரு மரத்தின் இலை உயிர்காக்கும் தளமாகிறது. சிறியதான ஒரு இலையின் மீது முழு பிரபஞ்சமும் தங்கியுள்ளது என்ற இந்தப் படிமம், சிறிய உயிர்களுக்கும் பெரிய சூழலுக்கும் இடையிலான சார்புணர்வைக் கவிதையாகச் சொல்கிறது.

6.4 நெய்தலிலிருந்து பாற்கடலுக்கு

சங்க நெய்தல் திணையில் கடல் இரங்கலுக்கும் காத்திருத்தலுக்கும் உரிய சூழல். முதல் திருவந்தாதியில் கடல் இறைவன் துயிலும் இடமாகவும் (அரவணை), அவன் நிறமாகவும் மாறுகிறது. இரங்கல் தரும் கடல் இங்கு அமைதி தரும் கடலாகிறது. இந்த மாற்றத்தை, திணை சார்ந்த உணர்வுகள் பக்தியுணர்வாக மாறுவதாகக் காணலாம். வைணவத் திருத்தலங்கள் நீர்நிலைகளைச் சுற்றி அமைந்து, நீரே இடங்களை இணைக்கும் தெய்வீகச் சக்தியாகக் கருதப்படுவதை Czerniak-Drożdżowicz (2023) சுட்டிக்காட்டுவது, பொய்கையில் தோன்றிய ஆழ்வாரின் நீர்சார் இறையியலுடன் இயல்பாகப் பொருந்துகிறது.



படம் 6. முதல் திருவந்தாதியில் கடலும் இறையியலும்

இப்படம் முதல் திருவந்தாதியில் உள்ள கடல் சார்ந்த இறையியலை விளக்குகிறது. காரோத வண்ணனான இறைவன் கடலில் துயிலுதலையும், பாற்கடல் கடைந்த நிகழ்வையும், பிரளயக் கடலில் ஆலிலையில் சிறுவனாய் உலகைக் காத்த நிலையையும், நெய்தல் திணை பக்தியுணர்வாக மாறுவதையும் இக்கதை உருவங்கள் அழகாக வெளிப்படுத்துகின்றன.

7. ஒளி: கதிரிலிருந்து ஞானச்சுடருக்கு

முதல் திருவந்தாதியில் ஒளி மூன்று வடிவங்களில் வருகிறது: இயற்கையொளி (கதிர், நெருப்பு, மின்னல்), வழிபாட்டொளி (விளக்கு, சுடர்), அகவொளி (ஞானம்). கதிரவன் மு.தி. 1, 8, 67 ஆகியவற்றிலும், நெருப்பு மு.தி. 5, 29, 37, 61 ஆகியவற்றிலும், ஒளி மு.தி. 32-இலும் இடம்பெறுகின்றன. இவற்றுடன் கார், முகில் என்ற இருண்ட நிறப் படிமங்களும் (மு.தி. 5, 27, 28, 34, 76) ஒளியை முன்னிறுத்தும் எதிர்ப்பின்னணியாகச் செயல்படுகின்றன.

7.1 வெய்ய கதிரோன்: உலகின் சுடர்

மு.தி. 1-இல் கதிரவன் விளக்கின் சுடராகிறான். இங்கு கதிரவன் தெய்வமாக வணங்கப்படவில்லை; திருமாலை வணங்கும் சடங்கின் ஒரு பங்காக மாறுகிறான். இது வைணவ இறையியலின் செல்வம்: இயற்கைச் சக்திகள் தனித் தெய்வங்களாகாமல், இறைவனைத் தொழும் அடியார்களாகின்றன. நெருப்பு, நீர், நிலம் ஆகிய பூதங்களை வழிபடும் மரபுகளை Navasakthivel and Bhuvaneswari (2022) விவரிக்கின்றனர்; பொய்கையார் அவற்றை ஒரு மைய இறைவனின் வழிபாட்டிற்குள் ஒருங்கிணைக்கிறார். தெய்வங்களை அகற்றாமல் அவற்றைப் பணிசெய்யும் இடத்தில் வைக்கும் இந்த முறை, இயற்கைவழிபாட்டை அழிக்காமல் அதைத் தெய்வீகத் தொண்டாக மாற்றுகிறது.

7.2 மின்னல் ஒளியில் கண்ட காட்சி

திருக்கோவலூர்க் கதையில், இடைகழியின் இருளில் மின்னல் ஒளியில்தான் திருமாலின் திருமுகம் கண்டதாக மரபு கூறுகிறது. மழை, இருள், மின்னல் என்ற இயற்கை நிகழ்வுகளே முதலாழ்வார் மூவருடைய சந்திப்புக்கும் இறைக் காட்சிக்கும் காரணமாகின்றன. இந்தக் கதையைத் திறனாய்வுக்கு உட்படுத்தாமல் நூலின் வரவேற்புப் பன்மையாகவே இவ்வாய்வு காண்கிறது. அதன் பொருள் தெளிவானது: இறையனுபவம் இயற்கையை விலகிய தவத்தில் அன்றி, இயற்கையின் நடுவில் நிகழ்கிறது.

7.3 சுடராழி: ஒளியே காப்பு

"செய்ய சுடராழி" (மு.தி. 1), "கையது வேல் நேமி" (மு.தி. 5) என்ற தொடர்களில் திருமாலின் சக்கரம் ஒளிவீசும் ஆயுதமாகக் காட்டப்படுகிறது. கதிரவனின் வட்டமும் சக்கரத்தின் வட்டமும் ஒரே பாசுரத்தில் அருகருகே வருவது கவனிக்கத்தக்கது. இயற்கையின் மிகப்பெரிய ஒளியும் இறைவனின் கையிலுள்ள ஒளியும் ஒன்றையொன்று எதிரொலிக்கின்றன. ஒளி இங்கு அழிக்கும் சக்தியாக அன்றி, இடரை நீக்கிக் காக்கும் சக்தியாகவே முன்னிறுத்தப்படுகிறது.

7.4 புறவிளக்கிலிருந்து அகவிளக்குக்கு

பொய்கையார் உலகத்தையே விளக்காக்கியதைத் தொடர்ந்து, பூதத்தாழ்வார் "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக" என்று அகவிளக்கை ஏற்றுகிறார் (இரண்டாம் திருவந்தாதி 1). இந்த இணைவு முக்கியமானது. மரபுவழியாகக் காரணம் காட்டும்போது, பொய்கையாரின் இயற்கை விளக்கும் பூதத்தாரின் அன்பு விளக்கும் ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன; இரண்டும் இணைந்த பிறகே பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்கிறார். சூழலியல் நோக்கில் இதன் பொருள்: வெளி உலகைப் புனிதமாகக் காணும் பார்வையும் உள்ளத்தின் அன்பும் இணையும்போதுதான் முழுமையான இறைக் காட்சி சாத்தியமாகிறது. இயற்கைமீதான அன்பு என்ற வள்ளலாரின் சீவகாருண்ணியம் போன்ற பிற்காலத் தமிழ் சிந்தனைகளுக்கு இந்த இணைவு முன்னோடியாகவும் காணப்படலாம்.

7.5 கார்மேனி: இருளில் ஒளிரும் இறைவன்

ஒளிப் படிமங்கள் அதிகமிருந்தாலும், திருமாலின் திருமேனி கார்முகில் நிறம். "எரி கார் மேனி" (மு.தி. 5) என்ற தொடரில் நெருப்பின் செந்நிறமும் முகிலின் கருநிறமும் அருகருகே வருகின்றன. கார்முகில் மழையைத் தரும் உயிர்நிலை; இறைவனை முகில் வண்ணனாகக் காண்பது வளம் தரும் மழையை அவன் அருளாகக் காண்பதாகும். இவ்வாறு ஒளியும் இருளும், நெருப்பும் நீரும் இறைவனின் உடலில் ஒருங்கே இடம்பெறுகின்றன. எதிர்மறைகளின் இந்த இணக்கம் சூழலமைப்பின் சமநிலையையே கவிதையாகச் சொல்லுகிறது.



படம் 7. கதிரிலிருந்து ஞானச்சுடருக்கு – முதல் திருவந்தாதியில் ஒளியியல்

இப்படம் முதல் திருவந்தாதியில் வரும் இயற்கை, வழிபாட்டு மற்றும் அக ஒளிகளை விளக்குகிறது. கதிரவன் இறைவனைத் தொழுவதையும் (7.1), மின்னல் இருளில் இறைவனைக் காட்டுவதையும் (7.2), சக்கரம் காக்கும் சுடராவதையும் (7.3), புற ஒளி அக ஞானமாக மாறுவதையும் (7.4), கார்மேனியில் ஒளி சுடர்வதையும் (7.5) இது சித்தரிக்கிறது.

8. விவாதம்: உலகமே வழிபாட்டு வெளி

முந்தைய மூன்று பகுதிகளின் கண்டறிதல்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன. மூன்று கூறுகளும் ஒரே விதமான மூன்று நிலைச் செயல்பாட்டைக் காட்டுகின்றன: வழிபாட்டுக் கருவி, இறைவனின் உடல்/நிறம், இறைச்செயலின் அரங்கு.

அட்டவணை 1. முதல் திருவந்தாதியில் நிலம், கடல், ஒளிப் படிமங்களின் பொருண்மை வகைப்பாடு

இயற்கைக் கூறு	முதன்மைப் படிமங்கள்	பாசுரங்கள் (மு.தி.)	வழிபாட்டுக் கருவி	இறையியல் பொருள்	சூழலியல் பொருள்
நிலம்	வையம், பார், வரை, வேங்கடம், குன்றம்	1, 2, 5, 26, 27, 38, 69, 76, 77	அகல்	படைத்தல், வராகம், திரிவிக்கிரமம், அர்ச்சை (வேங்கடம்)	நிலம் உடைமையல்ல; காக்கப்படும் உயிர்ப் பொருள்; மலை புனிதம்
கடல்	வார்கடல், காரோதம், வேலைநீர், ஆலிலை	1, 2, 5, 7, 19, 34, 69	நெய்	பாற்கடல் கடைதல், அரவணை, ஆலிலைச் செல்வன்	நீர்ச்சுழற்சி, வளம் அருளாக, விளைவில் காப்பு
ஒளி	கதிரோன், சுடராழி, எரி, மின்னல், கார்	1, 5, 8, 29, 32, 37, 61, 67	சுடர்	சக்கரம், இடர் நீக்கம், ஞானம்	இயற்கைச் சக்திகள் தொண்டாக; எதிர்மறைச் சமநிலை

8.1 இயற்கை வழிபாடா, இறையனைத்தும் கொள்கையா?

முதல் திருவந்தாதி இயற்கையைத் தெய்வமாக மாற்றவில்லை. கடல் நெய்யே; கதிர் சுடரே; வழிபடப்படுபவன் சுடராழியான். இதனால் இந்நூலின் பார்வை இயற்கை வழிபாட்டிலிருந்து மாறுபடுகிறது. ஆனால் இயற்கை இறைவனில் இருந்து பிரிக்கப்படவுமில்லை. உலகமும் அதன் கூறுகளும் இறைவனின் உடல் என்ற விசிஷ்டாத்வைதக் கருத்து, இராமானுஜருக்கு முன்பே இங்கு கவிதை வடிவில் வெளிப்படுகிறது. இந்த இறையனைத்தும் கொள்கை (panentheism) சூழலியல் அறத்துக்கு வலுவான அடிப்படை. உலகைத் தீங்கிழைப்பது இறைவனின் உடலுக்குத் தீங்கிழைப்பதாகும். இந்து மரபுகளின் சூழலியல் ஆற்றலை முன்வைக்கும் Sherma (2021) அவர்களின் வாதம் இங்கு தமிழ்ப் பக்திச் சான்று பெறுகிறது.

8.2 உருவம் அடியார் விரும்புவது

தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே தமருகந்தது எப்பேர்மற் றப்பேர் – தமருகந்து எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே அவ்வண்ணம் ஆழியான் ஆம் (மு.தி. 44)

அடியார் விரும்பும் உருவம், பெயர், வண்ணம் எதுவோ, அதுவே இறைவனாகும் என்ற இந்தப் பாசுரம் அர்ச்சைக் கொள்கையின் அடித்தளம். சூழலியல் நோக்கில் இதன் விளைவு விரிவானது. மலையில், கடலில், கதிரில் இறைவனைக் காணும் அடியாருக்கு

அவையே இறையுருவமாகின்றன. எனவே இயற்கையைத் தொழும் இடமாகக் காணும் சாத்தியம் இந்நூலின் இறையியலிலேயே முழுமையாக அடங்கியுள்ளது.

8.3 திணை மரபின் தொடர்ச்சியும் மாற்றமும்

சங்கத் திணைமரபில் ஒவ்வொரு நிலமும் ஒரு உணர்வுக்கும் ஒரு தெய்வத்துக்கும் உரியது. முதல் திருவந்தாதியில் நிலங்களின் வேறுபாடுகள் நீடிக்கின்றன; ஆனால் ஒரே இறைவன் எல்லாவற்றிலும் உறைகிறான். திணை இங்கு குறுகிய மண்டலவாதமாக இல்லாமல், ஒரு விரிந்த புனித நிலவியலாக மாறுகிறது. திணையை இயந்திரத்தனமாக வாசிப்பதை எதிர்க்கும் Landy et al. (2022) அவர்களின் நிலைப்பாட்டுக்கு இது ஒரு வரலாற்றுச் சான்றாகும்: திணை என்ற கருத்தாக்கம் பக்திக் காலத்திலேயே புதிய பொருள் பெற்றது.

8.4 இன்றைய பொருத்தப்பாடு

இன்றைய சூழல் நெருக்கடி, இயற்கையை வளம் மட்டுமே எனக் காணும் பார்வையின் விளைவு என்று தமிழ்ச் சூழலியல் திறனாய்வாளர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றனர் (Ravikumar, 2022; Rajeswari, 2020). முதல் திருவந்தாதி இதற்கு மாறான மூன்று பாடங்களைத் தருகிறது:

1. **புனிதமான உலகம்:** வையம் அகலானால், நிலத்தையும் கடலையும் மாசுபடுத்துவது வழிபாட்டுக் கருவியைக் கறைப்படுத்துவதாகும்.
2. **பணிவு:** "ஒன்றும் அதனை யுணரேன் நான்" (மு.தி. 2) என்ற ஒப்புதல் இயற்கையை முழுமையாகக் கட்டுப்படுத்தும் மனித ஆணவத்தைத் திருத்துகிறது.
3. **சார்புணர்வு:** அகல், நெய், சுடர் ஒன்றையொன்று சார்ந்து எரிவதுபோல, நிலம், நீர், ஒளி ஒன்றின்றி மற்றொன்று நிலைக்காது.

இந்தப் பாடங்கள் இன்றைய வைணவ சூழலியல் சிந்தனைகளை முன்னிறுத்தும் ஆய்வுகளோடும் ஒத்திசைகின்றன (Czerniak-Drożdżowicz, 2023; Sherma, 2021). ஆனால் இவற்றைந் துறைசார் சூழல் கொள்கையாக நேரடியாக மாற்றுவதில் எச்சரிக்கை தேவை. ஏழாம்–ஒன்பதாம் நூற்றாண்டுக் கவிதையை இன்றைய சூழல்இயக்கத்தின் அறிக்கையாக வாசிப்பது காலமுரண் ஆகும். அதனால் இவ்வாய்வு இந்நூலை ஒரு "சூழல் பாதுகாப்பு நூல்" என்று அன்றி, இன்றைய சூழலியல் அறத்துக்குப் பயன்படக்கூடிய ஒரு பண்பாட்டும் மூலமாக முன்வைக்கிறது.



படம் 8. உலகமே வழிபாட்டு வெளி – சூழலியல் இறையியல் சித்திரம்

இப்படம் முதல் திருவந்தாதியின் முடிவாக, நிலம், கடல், ஒளி ஆகிய இயற்கைக் கூறுகள் ஒன்றிணைந்து முழு உலகையுமே ஒரு வழிபாட்டு வெளியாக மாற்றுவதை விளக்குகிறது. உலகம் விளக்காகவும், இயற்கை இறைவனின் திருமேனியாகவும் திகழும் ஆன்மிக மற்றும் சூழலியல் ஒற்றுமையை இது அழகாக வெளிப்படுத்துகிறது.

9. முடிவுரை

பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி, நிலம், கடல், ஒளி ஆகிய மூன்று இயற்கைக் கூறுகளை ஒரே வழிபாட்டுச் சடங்கில் இணைத்து, உலகத்தையே ஒரு வழிபாட்டு வெளியாகக் கட்டமைக்கிறது என்பதை இவ்வாய்வு நிறுவியுள்ளது. இதன் முதன்மைக் கண்டறிதல்கள் வருமாறு:

1. **மூன்று நிலைச் செயல்பாடு:** ஒவ்வொரு இயற்கைக் கூறும் வழிபாட்டுக் கருவி, இறைவனின் உடல்/நிறம், இறைச்செயலின் அரங்கு என மூன்று நிலைகளில் செயல்படுகிறது (அட்டவணை 1).
2. **இறையனைத்தும் கொள்கை:** இந்நூல் இயற்கையைத் தெய்வமாக்கவுமில்லை, இறைவனிலிருந்து பிரிக்கவுமில்லை; இயற்கை இறைவனின் திருமேனியாகவும் அவனைத் தொழும் அடியாராகவும் இருமுகம் கொள்கிறது.
3. **திணை கடந்த இறைமை:** குறிஞ்சி, முல்லை, நெய்தல் என எல்லாத் திணைகளிலும் ஒரே இறைவன் விரிவதால், சங்கத் திணைமரபு ஒரு விரிந்த புனித நிலவியலாக மாறுகிறது.
4. **சூழலியல் அறம்:** புனிதம், பணிவு, சார்புணர்வு என்ற மூன்று பாடங்களை இந்நூலிலிருந்து பெறலாம்; அவை இயற்கையைச் சுரண்டும் பார்வைக்கு மாறான ஒரு தமிழ்ப் பண்பாட்டு மூலமாகும்.

"வையம் தகளியா" என்ற முதற்சொல்லிலேயே இந்நூலின் சூழலியல் இறையியல் சுருக்கமாக அடங்கியுள்ளது. உலகம் விளக்கானால், அதனைக் காப்பதும் ஒரு வழிபாடே.

9.1 ஆய்வின் வரம்புகள்

இவ்வாய்வு மூலப் பாடத்தின் நெருக்க வாசிப்பை மையமாகக் கொண்டது. பெரியவாச்சான்பிள்ளை உள்ளிட்ட மரபுவழி வியாக்கியானங்களுடன் விரிவான ஒப்பீடு இங்கு மேற்கொள்ளப்படவில்லை. படிம எண்ணிக்கைகள் பொருண்மை வகைப்பாட்டால் அமைந்தவை; முழுமையான சொல்அடைவு (concordance) அடிப்படையில் அவற்றை உறுதிப்படுத்தலாம்.

9.2 எதிர்கால ஆய்வுக்கான பரிந்துரைகள்

- முதல், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகளின் இயற்கைப் படிமங்களை ஒப்பிடும் முழுமையான ஆய்வு.
- கணினிவழிச் சொல்அடைவு, பொருண்மைப் பகுப்பாய்வு கருவிகளைக் கொண்டு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முழுவதிலும் இயற்கைச் சொற்களின் பரவலை அளவிடுதல்.
- தேவாரத்தின் இயற்கைப் படிமங்களுடன் ஒப்பிட்டு சைவ–வைணவ சூழலியல் இறையியலை ஆராய்தல்.
- திருக்கோவலூர், திருவெஃகா, வேங்கடம் ஆகிய திருத்தலங்களின் இன்றைய சூழல் நிலையை இலக்கியப் பதிவுகளுடன் ஒப்பிடும் களஆய்வு.

துணைமைச் சான்றுகள் (2020–2026)

Arthi, R. (2023). சூழலியத் திறனாய்வு நோக்கில் குலோத்துங்கனின் படைப்புகள் [Kulothungan's works in ecological perspective]. *International Journal of Tamil Language and Literary Studies, 6*(1), 42–51. https://doi.org/10.5281/zenodo.10122041

Balasubramanian, P. (2022). சூழலியப் பெண்ணிய நோக்கு: அள்ளூர் நன்முல்லையார் பாடல்களில் இயற்கையை எழுதுதலும் அக வெளிப்பாடும் [An ecofeminist perspective: Writing nature and inner expression in the poems of Allur Nanmullaiyar]. *International Research Journal of Tamil, 4*(S-8), 1–8. https://doi.org/10.34256/irjt22s81

Buchholz, J. (2023). The country and the city in the Kāñcippurāṇam. *Cracow Indological Studies, 25*(1), 41–77. https://doi.org/10.12797/CIS.25.2023.01.02

Czerniak-Drożdżowicz, M. (2023). Along the river, towards God: Raṅga shrines along rivers. *Cracow Indological Studies, 25*(1), 79–112. https://www.ceeol.com/search/article-detail?id=1215637

Czerniak-Drożdżowicz, M., & Dębicka-Borek, E. (2023). Introduction [Cultural ecology in the literary cultures of South Asia]. *Cracow Indological Studies, 25*(1), IX–XVII. https://doi.org/10.12797/CIS.25.2023.01.00

Emi Karmichael Paul, P. (2023). தமிழ் இலக்கியங்களில் இனக்குழுப் பண்புகளும், சூழலியலும் [Ethnic group traits and ecology in Tamil literature]. *International Journal of Tamil Language and Literary Studies, 6*(1), 52–60. https://doi.org/10.5281/zenodo.10122068

Landy, F., Gauché, E., & Sricandane, G. (2022). La poésie antique du Sangam est-elle vraiment une poésie du paysage ? Littérature tamoule classique et vision contemporaine du paysage [Is ancient Sangam poetry really landscape poetry? Classical Tamil literature and the contemporary vision of landscape]. *VertigO, 22*(3), 1–25. https://doi.org/10.4000/vertigo.36784

Murugesapandian, N. (2026). சங்க இலக்கியத்தில் சூழலியல் விழுமியங்கள் [Ecological values in Sangam literature]. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 1–10. https://doi.org/10.34293/tamil.v11i1.11249

Navasakthivel, P., & Bhuvaneswari, K. (2022). வைதீக வழிபாட்டு மரபுகளில் காணலாகும் சூழலியல் பங்களிப்புகள் [Ecological contributions found in orthodox worship traditions]. *International Research Journal of Tamil, 4*(S-22), 381–385. https://doi.org/10.34256/irjt224s-22258

Rajeswari, G. (2020). திருவள்ளுவரின் பண்பாட்டுச் சூழலியல் கொள்கை [Thiruvalluvar's concept of cultural ecology]. *International Research Journal of Tamil, 2*(3), 202–210. https://doi.org/10.34256/irjt20320

Ravikumar, R. (2022). தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் சூழலியல் பதிவுகள் [Ecological records in Tamil classical literature]. *International Research Journal of Tamil, 4*(4), 391–399. https://doi.org/10.34256/irjt22452

Sankareswari, M. (2023). சங்க இலக்கியத்தில் காடுகளும் அதன் சூழல் அமைவுகளும் [Forests and their environmental settings in Sangam literature]. *International Journal of Tamil Language and Literary Studies, 6*(1), 84–97. https://doi.org/10.5281/zenodo.10122151

Sherma, R. D. (2021). Relationality and revelation: Early Hindu ecological visions. *Religions, 12*(7), Article 465. https://doi.org/10.3390/rel12070465

Snehajansi, D. (2024). Pari, Pegan and Athigan (the seven great patrons) as deep ecologists. *Shanlax International Journal of English, 12*(S1-Feb), 119–121. https://doi.org/10.34293/english.v12iS1-Feb.7459

Sripriya, R. (2021). வைணவ அந்தாதிகளில் பக்திநெறி [Bhakti norms in Vaishnava anthathis]. *International Research Journal of Tamil, 3*(S-2), 185–189. https://doi.org/10.34256/irjt21s236

References

Arthi, R. (2023). சூழலியத் திறனாய்வு நோக்கில் குலோத்துங்கனின் படைப்புகள் [Kulothungan's works in ecological perspective]. International Journal of Tamil Language and Literary Studies, 6(1), 42–51. https://doi.org/10.5281/zenodo.10122041

Balasubramanian, P. (2022). சூழலியப் பெண்ணிய நோக்கு: அள்ளூர் நன்முல்லையார் பாடல்களில் இயற்கையை எழுதுதலும் அக வெளிப்பாடும் [An ecofeminist perspective: Writing nature and inner expression in the poems of Allur Nanmullaiyar]. International Research Journal of Tamil, 4(S-8), 1–8. https://doi.org/10.34256/irjt22s81

Buchholz, J. (2023). The country and the city in the Kāñcippurāṇam. Cracow Indological Studies, 25(1), 41–77. https://doi.org/10.12797/CIS.25.2023.01.02

Czerniak-Drożdżowicz, M. (2023). Along the river, towards God: Raṅga shrines along rivers. Cracow Indological Studies, 25(1), 79–112. https://www.ceeol.com/search/article-detail?id=1215637

Czerniak-Drożdżowicz, M., & Dębicka-Borek, E. (2023). Introduction [Cultural ecology in the literary cultures of South Asia]. Cracow Indological Studies, 25(1), IX–XVII. https://doi.org/10.12797/CIS.25.2023.01.00

Emi Karmichael Paul, P. (2023). தமிழ் இலக்கியங்களில் இனக்குழுப் பண்புகளும், சூழலியலும் [Ethnic group traits and ecology in Tamil literature]. International Journal of Tamil Language and Literary Studies, 6(1), 52–60. https://doi.org/10.5281/zenodo.10122068

Landy, F., Gauché, E., & Sricandane, G. (2022). La poésie antique du Sangam est-elle vraiment une poésie du paysage ? Littérature tamoule classique et vision contemporaine du paysage [Is ancient Sangam poetry really landscape poetry? Classical Tamil literature and the contemporary vision of landscape]. VertigO, 22(3), 1–25. https://doi.org/10.4000/vertigo.36784

Murugesapandian, N. (2026). சங்க இலக்கியத்தில் சூழலியல் விழுமியங்கள் [Ecological values in Sangam literature]. Shanlax International Journal of Tamil Research, 11(1), 1–10. https://doi.org/10.34293/tamil.v11i1.11249

Navasakthivel, P., & Bhuvaneswari, K. (2022). வைதீக வழிபாட்டு மரபுகளில் காணலாகும் சூழலியல் பங்களிப்புகள் [Ecological contributions found in orthodox worship traditions]. International Research Journal of Tamil, 4(S-22), 381–385. https://doi.org/10.34256/irjt224s-22258

Rajeswari, G. (2020). திருவள்ளுவரின் பண்பாட்டுச் சூழலியல் கொள்கை [Thiruvalluvar's concept of cultural ecology]. International Research Journal of Tamil, 2(3), 202–210. https://doi.org/10.34256/irjt20320

Ravikumar, R. (2022). தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் சூழலியல் பதிவுகள் [Ecological records in Tamil classical literature]. International Research Journal of Tamil, 4(4), 391–399. https://doi.org/10.34256/irjt22452

Sankareswari, M. (2023). சங்க இலக்கியத்தில் காடுகளும் அதன் சூழல் அமைவுகளும் [Forests and their environmental settings in Sangam literature]. International Journal of Tamil Language and Literary Studies, 6(1), 84–97. https://doi.org/10.5281/zenodo.10122151

Sherma, R. D. (2021). Relationality and revelation: Early Hindu ecological visions. Religions, 12(7), Article 465. https://doi.org/10.3390/rel12070465

Snehajansi, D. (2024). Pari, Pegan and Athigan (the seven great patrons) as deep ecologists. Shanlax International Journal of English, 12(S1-Feb), 119–121. https://doi.org/10.34293/english.v12iS1-Feb.7459

Sripriya, R. (2021). வைணவ அந்தாதிகளில் பக்திநெறி [Bhakti norms in Vaishnava anthathis]. International Research Journal of Tamil, 3(S-2), 185–189. https://doi.org/10.34256/irjt21s236